[1995 ஏப்ரல் 5

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழக்கு மேலும் மெருகூட்ட அறிவியல் தமிழை தமிழகத்திற்குத் தந்திட்ட அன்னை, திராவிட இயக்கத்தின் தீபமாக விளங்கும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் தனியார் கல்லூரி அங்கே இருக்கிறது. கந்தசாமி கண்டர் கல்லூரி இருக்கிறது. ஆனால் தனியார் கல்லூரிகளில் தங்களுடைய குழந்தைகளைப் படிக்க வைக்கக்கூடிய அளவிற்கு வசதி படைத்த மக்கள் அங்கே இல்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வாழ்கின்ற பரமத்தி-வேலூர் வட்டம் முழுமையாக கபிலர்மலை தொகுதியை உள்ளடக்கி உள்ளது. அப்படிப்பட்ட நிலை இருக்கின்ற காரணத்தால் இன்றல்ல, எதிர்காலத்திலாவது இப்படிப்பட்ட அரசுக் கல்லூரியைத் துவங்க கொள்கை அளவில் முடிவு எடுக்கின்றபோது, நிதிநிலை இடம் தருகின்றபோது பரமத்தி-வேலூர் வட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து தேர்வு செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *11-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அத்தனை நிலைமைகளும் சரியான பின்பு அரசு கொள்கை முடிவெடுக்கும்போது இது குறித்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *236*, திரு. சா. பன்னீர்செல்வம், இருக்கையில் இல்லை.

வினா எண் *237*, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

237—

பேர்ணாம்பட்டு தொகுதியில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல்

***33323—டாக்டர் ஜெ. பரந்தாமன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 5]

(அ) பேர்ணாம்பட்டு தொகுதி, சாத்கரிலும், பேர்ணாம்பட்டிலும் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பேர்ணாம்பட்டு தொகுதி சாத்கரிலும், பேர்ணாம்பட்டிலும் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேர்ணாம்பட்டு பகுதியில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட இஸ்லாமிய பீடித் தொழிலாளர்கள் நோயிலிருந்து விடுபடவேண்டி,

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்பதற்கு ஏற்ப, பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனைக்கு X-ray கருவி வழங்கிய, வேதனை தீர்த்தவர், விழிகளில் நிறைந்தவர், வெற்றித் திருமகள், நிரந்தர வெற்றித் திருமகள், நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். பேர்ணாம்பட்டுப் பகுதியில் வறிய நிலையில் சுமார் 5000–த்திற்கு மேல் இருக்கிறார்கள். மிக மிகச் சிறிய வீடுகளில் வசிக்கும் அவல நிலை இருக்கிறது. அண்ணாந்து பார்க்கின்ற மாளிகையின் அடியில் இருக்கும் ஓலைக் குடிசைகளை தீப் பிடிக்காத சிமெண்ட் வீடுகளாக மாற்றுவதில் புரட்சி செய்யும் டாக்டர் புரட்சித் தலைவி அரசு பேர்ணாம்பட்டு தொகுதியில் மிக அதிகமாக வீடுகளைக் கட்ட மனுச் செய்துள்ள தகுதியுள்ள பீடித் தொழிலாளர்கள் அனைவருக்கும் வீடுகள் கட்டித்தர ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள்

கட்டித்தரவேண்டும் என்பதில் இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் பரந்தாமன் அவர்களும், தொழிலாளர் நலத் துறை அதிகாரிகளும், வருவாய்த் துறை அதிகாரிகளும் 2-3-1995 அன்று பேர்ணாம்பட்டு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் காலியாக உள்ள புறம்போக்கு நிலங்களைப் பார்வையிட்டனர். வீடுகள் கட்டத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்த துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் வீடுகள் கட்டிக்கொடுக்க மைய அரசுடன் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை கொடுத்தவுடன் துணை ஆணையரை அனுப்பிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் சொல்லி பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டத்தில் செலவு எவ்வாறு ஏற்கப்படுகிறது. எவ்வளவு மத்திய அரசு, மாநில அரசு மானியம், வட்டியில்லாத கடனா? மத்திய அரசின் மானியத்தை உயர்த்த மாநில அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் மத்திய அரசின் உதவியோடு மாநில அரசால் அமல்படுத்தப்படுகிறது. வீடுகள் கட்டுவதற்கு நிலத்தை மாநில அரசு கையகப்படுத்தியோ அல்லது வாங்கியோ கொடுக்கின்றது. ஒரு வீடு கட்ட ரூ.22,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இதில் ரூ.9,000 மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. மீதமுள்ள ரூபாய் 13,000 மாநில அரசு கடனாகக் கொடுக்கின்றது. இந்தக் கடன் தொகையை 9 சதவிகிதம் வட்டி என்ற கணக்கில் 15 வருடங்களில் பீடித் தொழிலாளர்கள் திருப்பிச் செலுத்தவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 238 திரு. டி. வேலையா, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கே.ஆர். முருகானந்தம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.